

திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன் தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, ஸ்டாலின் குமார், மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம், விஜயா ஜெயராஜ், கருணாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் குடமுருட்டி சேகர், சித்ரா, பாரி வள்ளல், கருணை ராஜா, கிராப்பட்டி செல்வம்,மோகன் தாஸ், கமல், முஸ்தபா, ராம்குமார், துர்கா தேவி, கலைச்செல்வி, சோழன், சம்பத், முத்து, பழனி, தர்மசேகர், பி.ஆர். பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர்கள் கவியரசன், அந்தோணி, மணிவண்ண பாரதி, ஐ.டி. விங் அருண், கோவிந்த ராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூரில் அமைச்சர் பங்கேற்ற

# அரசு நிகழ்ச்சிக்கு பொறுப்பு மேயர் மாமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பில்லை!

## எதிர்க்கட்சிகளை புறக்கணிப்பதாக குற்றச்சாட்டு!

திருப்பூர், ஜூன். 4-

திருப்பூர் மாநகராட்சி, ஜெய்வாபாய் பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளி கல்வித்துறையும் இணைந்து நடத்திய அரசு பள்ளி மாணவர்களுக்கான கோடைகால சிறப்பு முகாமில் சிறப்பாக பங்கேற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், கால்நடைத் துறை அமைச்சர் கமலி, மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கோடைகால பயிற்சி முகாம்களில் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும், அமைச்சர் வழங்கினார். மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நடத்தப்பட்ட இந்த அரசு நிகழ்ச்சியில் அதே பகுதியில் இருக்கும் மாநகராட்சி பொறுப்பு மேயர் எம்.பாலசுப்ரமணியம் மற்றும் மாநகராட்சி கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன் ஆகியோருக்கு எந்தவித அழைப்பும், தகவலும் தெரிவிக்கப்படவில்லை. விழாவிற்குவந்த மாநகராட்சி கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன் இதுகுறித்துஅரசுஅதிகாரிகளிடம் விளக்கம் கேட்டு உள்ளார். இதனைத்தொடர்ந்து நிகழ்ச்சியின் பாதியிலிருந்து வெளியேறினார்.

இதுகுறித்து மாநகராட்சி கல்வி குழு தலைவர் பெ.திவாகரன் பத்திரிக்கையாளர்களிடம் கூறியதாவது :

அரசு சார்பில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் அதுவும், மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி (பொறுப்பு) மேயருக்கும், இந்த பகுதியின் மாமன்ற உறுப்பினரும், கல்விக்குழு தலைவருமான எனக்கு எந்த வித அழைப்பிதழும் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. எதிர்க்கட்சி என்ற காரணத்தால் வேண்டுமென்றே புறக்கணித்து உள்ளனர். அரசு அதிகாரிகள் தரப்பில் இருந்தும் எங்களுக்கு எந்த விதமான அழைப்புகளோ, தகவலோ தெரிவிக்கப்படாது ஏமாற்றத்தை அளிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்களாக இருக்கும் எங்களிடம் தகவல் தெரிவிக்காமல் இது போன்ற தனிப்பட்ட முறையில் அரசின் நிகழ்ச்சிகளை நடத்துவது பெரும் ஏமாற்றத்தை கொடுக்கிறது என்று கூறினார்.

# திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாள் நிகழ்ச்சி!

## என்,கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை!

கீழ்வேளூர், ஜூன். 4-

திருக்குவளையில் கலைஞரின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, கலைஞர் பிறந்த இல்லத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருஉருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லம் உள்ளது. கலைஞர் இல்லம் கலைஞரின் தந்தை பெயரில் முத்துவேலர் நூலகம், தாயார் பெயரில் அஞ்சுகம் படிப்பகம் உள்ளது. இந்த இல்லத்தில் கலைஞருக்கு மார்பளவு வெண்கல சிலை உள்ளது.

மேலும் கலைஞர் தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகம், முன்னாள் மத்திய அமைச்சர் என் முரசொலிமாறன் ஆகியோரின் சிலையும் இங்கு உள்ளது. கலைஞரின் இல்லத்தில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது தேசிய தலைவர்கள் சந்திப்பு, வெளிநாடு சுற்றுப் பயணம், கலைஞர் ஆட்சியின் சாதனைகள் கொண்ட புகைப்படங்கள் உள்ளது.

கலைஞர் எழுதிய கடிதங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் சிலைக்கு மாலை மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடை பெற்றது.

நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தின் மாலை அணிவித்துமரியாதை செலுத்தினர்கள்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப. கோவிந்தராசன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன், மாவட்டக்கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம் நீலமேகம், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோ.சி.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், மகா.குமார், சிக்கல் என். ஆனந்த, உதயம் வே.முருகையன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், செந்தில், கணேசன், கீழையூர் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் வை.சண்முக சுந்தரம் பார்த்திபன், சுரேஷ், டி.அசோக் குமார், ஒன்றே குலம் முன்னாள் உறுப்பினர் சுதா அருணகிரி, கலைஞர் இல்ல காப்பாளர் தியாகராஜன் மற்றும் பாஸ்கர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கலைஞரின் தந்தைமுத்துவேலர், தாயார் அஞ்சுகம், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் ஆகியோர்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும், பழைய பேருந்து பேருந்து நிறுத்தம் அருகே உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கும் மாவட்ட கழக செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம், து.செல்வம், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம்,நான்கு ரோட்டில் தருமபுரி தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி.முத்தமிழறிஞர் கலைஞரின் 103 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கேக் வெட்டி கொண்டாடினார். உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் தருமசெல்வன்,நகர செயலாளர் நாட்டான் மாது,கௌதம் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### மகா.குமார் தலைமை! கற்பகம் நீலமேகம் – மா.மீ.புகழேந்தி பங்கேற்பு!

# தலைஞாயிறு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை. ஜூன். 4-

நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியத்தில் நேற்று (ஜூன் 3ம் தேதி) முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடியேற்றி, இனிப்பு, மரக்கன்றுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது என்று தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் மணக்குடியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு, தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகாகுமார் தலைமை தாங்கினார்.

மாவட்ட கழக துணை செயலாளர் கற்பகம்நீலமேகம், வேதாரணியம் நகர கழக செயலாளர் மா.மீ.புகழேந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில், வேதாரண்யம் நகர செயலாளர் மா.மீ.புகழேந்தி, தலைஞாயிறு முன்னாள் பேரூராட்சித்

தலைவர் ராஜேந்திரன், மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் சுந்தர பிரபாகரன், மாவட்ட பிரதிநிதிகள் மச்சழகன், வீரகுமார் பேரூர் துணைச் செயலாளர் முருகானந்தம், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புவனேஸ்வரிசெந்தில், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பரமேஸ்வரி மற்றும் மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில். நேற்று ஜூன் 3ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றியம் கிளைகள் தோறும் கழக கொடியேற்றி, இனிப்பு, மரக்கன்றுகள் வழங்குதல் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

டைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும், கிளைக் கழக நிர்வாகிகளுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள் கழக செயல் வீரர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலினை அவர்களை அறிவித்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்றுள்ள கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# திண்டிவனம் நகரம் 14 வது வார்டு தி.மு.க. சார்பில் இனிப்புகள் வழங்கல்!

## கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாடு!

விழுப்புரம், ஜூன். 04

விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா முன்னிட்டு செஞ்சி சாலையில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இதில் முன்னாள் துணைச் செயலாளர் கே.அசோகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனிராஜ் எம்.சி, மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி ந.ப. மனோகரன், நகரப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், நகர மன்ற உறுப்பினர்கள் அரும்பு குணசேகரன், பார்த்திபன், சாரங்கபாணி, வழக்கறிஞர் செந்தில்குமார், ஜெ.சரவணன், என்.ராஜேந்திரன், வி.சங்கர், எல்.ஐ.சி. ராஜேஷ், ஆர். கன்னியப்பன், மொசைக் ராஜேந்திரன், எஸ்.பழனி, எம்.சாதிக், வி.சுந்தர மூர்த்தி, கே.எம். பாலாஜி, தஸ்தகீர், எஸ். முகமது இலியாஸ், சபா. வெங்கட், ஏகாம்பரம், கே.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியினை 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே. ராஜேந்திரன் ஏற்பாடு செய்திருந்தார்.



திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சி சாலையில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் கே.அசோகன், சீனிராஜ் எம்.சி, வி.எஸ்.முருகன், ந.ப.மனோகரன், சின்னா கே.ராஜேந்திரன், அரும்பு குணசேகரன், பார்த்திபன், சாரங்கபாணி, வழக்கறிஞர் செந்தில்குமார், ஜெ.சரவணன், என்.ராஜேந்திரன், வி.சங்கர், எல்.ஐ.சி. ராஜேஷ், ஆர்.கன்னியப்பன், மொசைக் ராஜேந்திரன், எஸ்.பழனி, எம்.சாதிக், வி.சுந்தரமூர்த்தி, கே.எம்.பாலாஜி, தஸ்தகீர், எஸ்.முகமது இலியாஸ், சபா.வெங்கட், ஏகாம்பரம், கே.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில், கரூர் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் வி .செந்தில்பாலாஜி வழிகாட்டுதலின்படி, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, கரூர் வெண்ணமலை அன்புக் கரங்கள் ஆதரவற்றோர் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மாவட்ட அவைத் தலைவர் டி ராஜேந்திரன் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர் .இளங்கோ, சூரியனூர் சந்திரன், மாநில மாவட்ட, மாநகர ,பகுதி, நகர, ஒன்றிய செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.